2011 ஜூன் 10] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் அறிவிப்புகளிலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், மேம்பாலங்கள் கட்டப்படவில்லை. சாலை மேம்பாலம் தொடங்கப்படாத நிலையில், ஓமந்தூரர் அரசினர் தோட்ட கட்டடப் பகுதியிலுள்ள அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவே இயலாது. இவ்வாறு முழுமையடையாத, நிருவாகத்திற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய கட்டடத்திலிருந்து எவ்வாறு செயல்பட முடியும் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும்.

புதிய பிளாக் A கட்டடம் பயன்படுத்தப்படாமல் மக்கள் பணம் வீணடிக்கப்பட்டுவிடும் என்று தி.மு.க. வினர் அங்கலாய்க்கத் தேவையில்லை. இந்தக் கட்டடம் உரிய முறையில் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தலைமையிலான அரசு மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதற்குண்டான திட்டங்களைத் தீட்டி, மக்கள் வாழ்வு வளம் பெறவும், அவர்கள் நலன் பேணிப் பாதுகாக்கவும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் காரணமாகத்தான் நான் முதலமைச்சராகப் பதவியேற்றுக்கொண்ட அன்றே மக்கள் பயன்பெறத்தக்க திட்டங்களில் கையெழுத்திட்டேன். மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பதால்தான், எங்கள் தேர்தல் அறிக்கையிலேயே பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசி இலவசமாக வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) மிக அதிகமாக இலவசங்கள் வழங்குவோம் என்று கூறி மக்களிடமிருந்து ஓட்டுக்களைப் பறித்துக்கொள்ளும் திட்டமாக இதை நான் கருதவில்லை. இலவச அரிசி என்பது மக்களுக்கு உண்மையிலேயே உணவுப் பாதுகாப்பை அளிக்கக்கூடிய திட்டம். எனவேதான், முதல் நாளிலேயே அதற்கான உத்தரவைப் பிறப்பித்தேன்.

அதைப்போன்றுதான் அன்று பிறப்பித்த ஏனைய உத்தரவுகளும். மகளிருக்கு வழங்கும் திருமண உதவித் திட்டத்துடன் தாலிக்கான 4 கிராம் தங்கம்; இளங்கலைப் பட்டம், பட்டயம் படித்த மகளிருக்கு 50,000 ரூபாய் மற்றும் தாலிக்கான 4 கிராம் தங்கம் வழங்கப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பித்தேன்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 10

இது திருமணத்திற்காக இலவசமாக வழங்கும் பரிசு அல்ல; இதில் ஒரு பெரும் பொருள் புதைந்து இருக்கிறது. பாரதி கண்ட கனவான 'ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை' என்ற நிலை ஏற்பட வேண்டுமென்றால், பெண் கல்வி ஊக்குவிக்கப்பட வேண்டும். எனவேதான், இளங்கலைப் பட்டம் மற்றும் பட்டயம் படித்த பெண்களுக்குத் திருமண உதவித் தொகையை இரட்டிப்பாக்கி, 50,000/– ரூபாய் என உத்தரவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) உலகப் பொருளாதார காரணங்களினால் தங்கத்தின் விலை விண்ணை எட்டும் அளவு ஏறிக்கொண்டிருக்கும் நேரத்தில், திருமண உதவியாக தங்கம் வழங்க வேண்டும் என்பதால்தான் தேர்தல் அறிக்கையிலேயே அதைக் குறிப்பிட்டு அதற்கான உத்தரவையும் பிறப்பித்தேன்.

இவ்வாறு வழங்கப்பட்ட உதவித் தொகைகளுக்கு எல்லாம் குறை கண்டுபிடிக்க வேண்டும் என்றே தி.மு.க. –வைச் சேர்ந்தவர்கள் தங்களது திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன, அவ்வளவுதான் என்று பொத்தாம் பொதுவாகக் கூறியுள்ளனர்.

மேலும், முன்னாள் முதல்வர் திரு. மு. கருணாநிதி தனது கட்சியினருக்கு எழுதியுள்ள கடிதத்தில், பல இலவசத் திட்டங்களை தங்கள் காலத்திலேயே ஏற்படுத்தியபோது, மக்களின் வாழ்க்கையையே பாழாக்குகிறார்கள் என்றும், மக்களை முன்னேற விடாமல் சோம்பேறி ஆக்குகிறார்கள் என்றும் சில எதிர்க் கட்சியினரும், ஏடுகள் நடத்தும் சிலரும் கண்டனம் தெரிவித்தார்கள் என்று கூறி, தற்போது இலவச அரிசித் திட்டத்தைப் பத்திரிகைகள் பாராட்டுவதற்கு தனது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார். மக்கள் வறுமையில் இருந்து விடுபடும்வரை வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகத் தேவையானவை வழங்கப்படுவதும், இலவசம் என வழங்கப்படுவதும் வேறு வேறு ஆகும். மனித வளம் மேம்பட மனிதர்கள் தங்கள் அத்தியாவசியத் தேவைகளைப் பெற அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை நாங்கள் என்றுமே எதிர்த்தது கிடையாது. வாழ்க்கைத்தரம் முன்னேற வழங்கப்படும் சலுகைகளுக்கும், இலவசங்களுக்கும் உள்ள வித்தியாசம் ஒரு சிறிய எல்லைதான். எந்த எல்லைக்குள் இருப்பது, மனித வள மேம்பாட்டிற்கு ஏற்றது என்பதும், எந்த எல்லைக் கோட்டைத் தாண்டுவது மக்களை ஏமாற்ற வழங்கப்படும் இலவசம் என்பதும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். அவ்வாறு மக்களின் ஓட்டுக்களைப் பெறுவதற்காக வழங்கப்படும்